
பொருளியியல்

பொருளியலின் அடிப்படையைப் பரீசிலனை செய்வார்



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

பொருளியலின் அடிப்படையைப் பரீசிலனை செய்வார்



பௌதீக தேவைகள்

பௌதீகத் தேவை என்பது பொருட்கள் சேவைகள் நுகர்வின் மூலம் நேரடியாக நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவை.

உதாரணம் :- உணவு, உடை, உறையுள்

உளத்தேவைகள்

சமூகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களைப்பயன்படுத்தி மனிதன் தனது பௌதீக தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்திசெய்ய மேற்கொள்ளும் செயற்பாடுகளும் நடத்தைகளும் பொருளாதார நடத்தையாகக் கருதப்படும்.

உதாரணம் : - பொருட்கள் சேவைகளின் உற்பத்தி பங்கீடு, முதலீடு

பொருளாதார நடத்தை

சமூகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களைப்பயன்படுத்தி மனிதன் தனது பௌதீக தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்திசெய்ய மேற்கொள்ளும் செயற்பாடுகளும் நடத்தைகளும் பொருளாதார நடத்தையாகக் கருதப்படும்.

உதாரணம் : - பொருட்கள் சேவைகளின் உற்பத்தி பங்கீடு, முதலீடு

தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன் ஆசிரியர் - பொருளியல் (யா/வேம்படி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பொருளியல் ஆய்வு

சமூகத்தில் மக்களிடையில் பல்வேறு விதமான நடத்தைகள் காணப்படுவதனால் மனிதனின் பொருளாதார நடத்தைகள் தொடர்பான ஆய்வு பொருளியல் ஆய்வு எனப்படும்.

பொருளியல் விஞ்ஞானம்

பொருளியலில் அவதானத்திற்கு உள்ளாகக்கூடிய பல்வேறு வடிவங்களைக் கொண்ட பொருளியற் கோட்பாடுகளும் மூலாதாரங்களும் விஞ்ஞான முறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதனால் பொருளியல் ஒரு விஞ்ஞானமாகும்.

பொருளியல் விஞ்ஞானமானது இயற்கை விஞ்ஞானத்திலிருந்து வேறுபடக்கூடிய பிரதான காரணிகள்.

1. பொருளியல் மூலம் மனிதனது பொருளாதார நடத்தை ஆராயப்படும்.
2. பொருளியற் கோட்பாடுகளை விஞ்ஞான ஆய்வு கூடங்களின் உதவியுடன் உறுதிப்படுத்த முடியாதிருத்தல்
3. மனித நடத்தையானது காலம், பிரதேசம், சமூகசூழல் போன்ற காரணிகளுடன் தொடர்புடையதாகும். இயற்கை விஞ்ஞானத்தினால் உருவாக்கப்படும் முறையில் கோட்பாடுகளை பொருளியல் போன்ற சமூக விஞ்ஞானங்களில் உருவாக்க முடியாதிருத்தல்.

பொருளியல் ஓர் சமூக விஞ்ஞானம்

சமூக விஞ்ஞான என்பது மனித நடத்தைகளை விடயப்பரப்பாகக் கொண்ட தகவல்கள் திரட்டப்பட்டு அவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் தீர்க்கமான பொது முடிவினைப் பெறுவதாகும்.

பொருளியலானது மனிதனது பொருளியல் சார் மனித மனித நடத்தைகளை விடயப்பரப்பாகக் கொண்டு தகவல்களைத் திரட்டி அவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் பொது முடிவுகளைப் பெறுவதனால் பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானமாகும்.

பொருளியலைப் போன்று வேறு எந்தப் பாடமும் மனித வாழ்வுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருக்கவில்லை என்பதனால் பொருளியலை சமூக விஞ்ஞானங்களின் இராணி எனக் கருதுகின்றனர்.

தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன் ஆசிரியர் - பொருளியல் (யா/வேம்படி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பொருளியல் பற்றிய வரைவிலக்கணம்

மாற்றுப் பயன்பாடுடைய அருமையான வளங்களுக்கும் எல்லையற்ற மனித விருப்பங்களுக்கு இடையிலான தொடர்பு பொருளியலாகும்.

அல்லது

பற்றக்குறையான வளங்களைக் கொண்டு எல்லையற்ற மனித விருப்பங்களை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பதுடன் தொடர்புடைய பாடம் பொருளியலாகும்.

நுண்பாகப் பொருளியலும் பேரினப் பொருளியல்

Micro Economics and macro Economics

நுண்பாகப் பொருளியல்	பேரினப் பொருளியல்
• பொருளியலை சிறுசிறு பகுதியாகப் பிரித்து ஆய்வு செய்யும் பொருளியல் நுண்பாகப் பொருளியல் ஆகும்.	• பொருளியலின் ஒட்டு மொத்த செயற்பாடுகளை முழுமையாக ஆய்வு செய்யும் பொருளியல் பேரினப் பொருளியலாகும்.
• பொருளாதார அலகொன்றில் காணப்படும் நுகர்வோன் ஊழியர், உற்பத்தி நிறுவனம், அரசு போன்ற தீர்மானம் மேற்கொள்ளும் தனிக் கூறுகளின் பொருளாதார நடத்தையை ஆய்வு செய்வது நுண்பாகப் பொருளியலாகும்.	• நுகர்வோன், ஊழியர், உற்பத்தி நிறுவனம் அரசு போன்ற சிறிய அலகுகளை மொத்தமாக ஆய்வு செய்வது பேரினப் பொருளியலாகும்.
உதாரணம் :- கேள்வி, நிரம்பல், உற்பத்தித் தொழிற்பாடு, சந்தை, அருமை எல்லைச் செலவு	உதாரணம் :- மொத்த வெளியீடு, மொத்த வருமானம், வேலைவாய்ப்பு பொருளாதார வளர்ச்சி, சென்மதி நிலுவை, நாணய மாற்று வீதம் பணநிரம்பல்.

தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன் ஆசிரியர் - பொருளியல் (யா/வேம்படி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நேர்ப்பொருளியலும் நியமப் பொருளியலும்

நேர்ப்பொருளியல்	நியமப் பொருளியல்
• அது என்ன யாது நிகழ்ந்தது அதனால் யாது நிகழும் என்ற பிரச்சனைகளுக்கு விடைகாணக் கூடியதாவும் கூற்றின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ள பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடியதுமான கூற்றுக்கள் நேர்கூற்றுக்களாகும்.	• சமூகத்தில் யாது நிகழவேண்டும் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் முன் வைக்கப்படும் கூற்றுக்கள் நியமக் கூற்றுக்களாகும்.
• நேர் கூற்றுக்களின் உண்மைத்தன்மையினை நடைமுறை உலகுடன் ஒப்பிட்டு நோக்கலாம்.	• நியமக் கூற்றுக்கள் தனிநபரின் கருத்துக்கள் நம்பிக்கைகளின் அடிப்படையில் இருப்பதனால் பெரும்பாலும் தனிநபர் ரீதியானதாகும். உலகத்தகவல்களுடன் தொடர்புபடுத்தி பரிசீலனை செய்வது சிக்கலானதாகும்.
• இக்கூற்றுக்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது/ நிராகரிக்கப்படக்கூடியது.	• நியமமானதாகக் காணப்படும்.
உதாரணம் :- 1. பணநிரம்பலுக்கு விலைமட்டத்திற்குமிடையில் நேர்த்தொடர்புண்டு. 2. கடந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார	உதாரணம் :- 1. ஒவ்வொரு ஊழியரது மாதாந்த சம்பளத்தை 5000 ரூபாவால் உயர்த்தல் வேண்டும். 2. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம்



தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன் ஆசிரியர் - பொருளியல் (யா/வேம்படி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk